சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பிஎல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.559/2019

(Old No.100/2015)

**CNR No.TNSV030011832019**

---

1) சாம்பவிகா கல்வி அறக்கட்டளை,

அதன் தலைவர் திரு.A.M.சேகர் மூலம்.

2) சாம்பவிகா மேல்நிலைப்பள்ளி,

ராகிணிப்பட்டி,

அதன் செயலாளர் திரு.A.M.சேகர் மூலம்.

3) A.M. சேகர்

4) S. ராணி

5) M.S. கார்த்திகேயன் ......வாதிகள்

(4th Defendant was transpose in 5th Plaintiff

as per Order in I.A.No. 5/2025 dated 13.08.2025

and amended as per Order in I.A.No. 6/2025 dated 18.08.2025)

..எதிர்..

1) RM. காசி

2) K. பாலமுருகன்

3) மலர்வேணி ......பிரதிவாதிகள்

(4th Defendant was added as per Order in

I.A.No.2/2023 dated 19.10.2023 and amended

as per Order in I.A.No.3/2025 dated 28.04.2025)

இவ்வழக்கானது 03.06.2015-ம் தேதியன்று சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.100/2015 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு

பின்னிட்டு சிவகங்கை மாவட்ட முதன்மை நீதிமன்ற உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.559/2019 ஆக 11.11.2019-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.04.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது 1 முதல் 5 வாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இதுநாள் வரையில் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

1ம் பிரதிவாதி 20.05.2012-ம் தேதி வரையிலான சாம்பவிகா கல்வி அறக்கட்டளை உண்மையான மற்றும் சரியான வரவு செலவு கணக்குகளை வாதிகள் வசம் ஒப்படைக்கும் படிக்கும், 1ம் பிரதிவாதி 20.05.2012-ம் தேதி வரையிலான சாம்பவிகா மேனிலைப்பள்ளியின் உண்மையான மற்றும் சரியான வரவு செலவு கணக்குகளை வாதிகள் வசம் ஒப்படைக்கும் படிக்கும், சாம்பவிகா கல்வி அறக்கட்டளை கூட்ட அறிவிப்பு அனுப்ப பிரதிவாதிகளுக்கு நிரந்தர தடை விதித்து உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், மற்றும் செலவுத் தொகை கோரியும் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>**

பிரதிவாதிகளும் மேலும் மூன்று பேர்களான K.முத்துக் கண்ணன், V.சரவணன் மற்றும் K.கணேசன் உட்பட மொத்தம் ஆறு நபர்கள் டிரஸ்டிகளாக இருந்து "சாம்பவிகா கல்வி அறக்கட்டளை" என்ற ஒரு அறக்கட்டளையை 18.11.1999ம் தேதி தொடங்கி மேற்படி அறக்கட்டளையும் 18.11.1999 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின் 15.12.2000-ம் தேதியில் "சாம்பவிகா மேல்நிலைப்பள்ளி" என்ற பெயரில் வாதிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியே மேற்படி அறக்கட்டளையின் தலைவராகவும், பள்ளியின் செயலாளராகவும் ஆரம்பத்தில் செயல்பட்டார். டிரஸ்டிகளில் ஒருவரான K.முத்துக் கண்ணன் என்பவர் பள்ளியின் தலைமை ஆசிரியராக செயல்பட்டு வந்தார். 1ம் பிரதிவாதி தனது மகனான மாறன்

என்பவரை வாதிப் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியராக நியமித்துக் கொண்டு மேற்படி சாம்பவிகா கல்வி அறக் கட்டளையையும், சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியையும் நிர்வகித்து வந்த போது அறக்கட்டளை விதிமுறைகளுக்கு உட்பட்டு அறக்கட்டளை சம்பந்தமான கூட்டங்களை முறையாக கூட்டாமலும் அறக்கட்டளைக்கு தேர்தல் நடத்தி நிர்வாகிகளை முறைப்படி தேர்ந்தெடுக்காமலும் அறக்கட்டளை நடவடிக்கை புத்தகத்தில் (Minute Book) முறையான குறிப்புகளை எழுதாமலும் தன்னிச்சையாக செயல்பட்டு வந்தார். மேற்படி 1ம் பிரதிவாதி மேற்படி அறக்கட்டளை மற்றும் பள்ளியை நிர்வாகம் செய்து வந்த போது அதன் கணக்கு வழக்குகளை மற்ற டிரஸ்டிகளிடம் முறையாக ஒப்படைக்கவில்லை. மேலும் மேற்படி அறக்கட்டளை மற்றும் பள்ளியின் வருமானம் அனைத்தையும் தன் சொந்த பணமாக பாவித்து 1ம் பிரதிவாதியும், அவரது மகனான மாறன் என்பவரும் சிவகங்கை நகரில் செந்தமிழ் நகர், AKR நகர் ஆகிய பகுதிகளில் பல கோடி ரூபாய் மதிப்பிற்கு காலி மனைகளை வாங்கியும், வீடுகளை கட்டியும் அறக்கட்டளை விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டு வந்தனர்.

வாதிகள் தரப்பில் மேற்படி அறக்கட்டளையை ஆரம்பித்த 6 பேர்களில் ஒருவரும் சாம்பவிகா பள்ளியின் தலைமை ஆசிரியராக செயல்பட்டு வந்த முத்துக் கண்ணன் என்பரை 1ம் பிரதிவாதியும், அவரது மகன் மாறனும் சேர்த்து கொண்டு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி மேற்படி முத்துக்கண்ணன் என்பவரை வேலையை விட்டு நிறுத்தி 1ம் பிரதிவாதி அவரின் மகனான மாறனை பள்ளியின் தலைமையாசிரியராக நியமித்துக் கொண்டு பள்ளியின் வருமானத்தையும் பல்வேறு முறையற்ற வழியில் செலவு செய்தனர். குறிப்பாக 1ம் பிரதிவாதி பள்ளியில் செயலாளராக செயல்பட்டு வந்த காலக் கட்டங்களில் பள்ளியின் அங்கீகாரத்தை கூட முறையாக புதுப்பிக்கவில்லை. 1ம் பிரதிவாதியின் சீரற்ற நிர்வாகத்தினால் அதிருப்தி அடைந்த அறக்கட்டளை உறுப்பினர்களான முத்துக் கண்ணன், சரவணன் மற்றும் கணேசன் ஆகியோர்கள் தங்கள் பதவியை இராஜினாமா செய்தனர்.

வாதிகள் தரப்பில் மேற்படி அறக்கட்டளை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த மூன்று டிரஸ்ட் உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை கொடுக்கக் கூட இயலாக அளவிற்கு 1ம் பிரதிவாதி ஆடம்பர செலவு செய்வதறியாது வாதி மற்றும் அவரது மனைவியான ராணி என்பவரையும் அணுகி

மேற்படி அறக் கட்டளை உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளுமாறும், அதற்காக அறக்கட்டளையை விட்டு விலகிய நபர்களுக்கும் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை வாதிகளை கொடுக்கச் சொல்லியும் கேட்டுக் கொண்டதன் பேரில் வாதிகளும் 1ம் பிரதிவாதி 4ம் வாதி ராணியின் தந்தை என்பதை கருத்தில் கொண்டு பள்ளியை காப்பாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் 3 பங்குகளில் 1 பங்கினை வாதி சேகரும் மற்றொரு பங்கினை வாதியும் 1ம் பிரதிவாதியின் மகளுமான ராணியும் மற்றொரு பங்கினை 1ம் பிரதிவாதியின் இளைய மகனான பாரதிதாசன் பெயரில் இந்த வாதி சேகரின் பணத்தைக் கொண்டும் வாங்கப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில் வாதிகள் சேகர் மற்றும் ராணியின் மகன் இளவராக இருந்த காரணத்தால் அவருக்கு பதிலாக பாரதிதாசன் பெயரில் பங்குகள் வாங்கப்பட்டது. மேற்படி இளவர் உரிய வயதை அடைந்த உடன் மேற்படி பாரதிதாசனை நீக்கி விட்டு வாதியின் மகனை டிரஸ்டியாக நியமிப்பதாக 1ம் பிரதிவாதி உறுதிபளித்திருந்தார். ஆனால் மேற்படி உறுதிமொழியை கூட தன் மகள் மற்றும் மருமகனான வாதிகளிடம் கூட காப்பாற்றவில்லை என்பது இங்கு குறிப்பாக உணர்த்தப் படுகிறது.

இந்நிலையில், 1ம் பிரதிவாதியின் மகனான மாறன் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சையிலிருந்து இறுதியில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மேற்படி கால கட்டங்களில் சாம்பவிகா பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர்களின் சீரிய பணியால் மேற்படி பள்ளி அந்த பகுதியில் நன் மதிப்பைப் பெற்று வளர்ந்து வந்தது. 1ம் பிரதிவாதி அறக்கட்டளை தலைவராகவும், பள்ளி செயலாளராகவும் இருந்த போதிலும் சரியான நேரத்தில் டிரஸ்ட் கூட்டத்தை கூட்டாமலும், பள்ளியின் வரவு செலவு கணக்குகளை மற்ற டிரஸ்ட் உறுப்பினர்களுக்கு காட்டாமலும் தான்தோன்றிதனமாக செயல்பட்டு வந்தார். எனவே 07.03.2012-ல் இந்த வாதி சேகர் மற்றும் ராணி ஆகியோர் 1ம் பிரதிவாதிக்கு டிரஸ்டின் செயல்பாடு குறித்தும், கணக்கு வழக்கு கேட்டும் சட்ட அறிவிப்பு அனுப்பினார். மேலும் இது குறித்து காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டது. காவல்துறை கண்காணிப்பாளர் விசாரணை செய்ததில் 20.05.2012ல் டிரஸ்ட் கூட்டம் கூட்டுவதாக ஒப்புக் கொண்டு 20.05.2012ல் டிரஸ்ட் கூட்டம் கூட்டப்பட்டது. அந்த கூட்டத்தில் தான் வாதி சேகர் அறக்கட்டளை தலைவராகவும், வாதி ராணி செயலாளராகவும், 3ம் பிரதிவாதி பொருளாளராகவும் தேர்வு

செய்யப்பட்டனர். மேற்படி விஷயங்களை ஒப்பு கொண்டும், பள்ளி கட்டணத்தை தான் வசூல் செய்வதாகவும் 13.02.2013-ம் தேதி அவர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். 23.08.2012ல் 1ம் பிரதிவாதி பள்ளி செயலாளர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்த பின் இந்த வாதி சேகர் பள்ளியின் செயலாளராக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு இன்று வரை செயலாற்றி வருகிறார். மேலும் மேற்படி மூன்றாம் வாதி சேகர் 2012-ம் வருடம் பளளியின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இன்றைய தேதி வரை மேற்படி பள்ளிக்கு 1 முதல் 3 மாடிகள் கொண்ட 4 புதிய மிகப்பெரிய கட்டிடங்களையும் கட்டி உள்ளார். அதே போல 2012ம் வருடத்திற்கு முன்பு பள்ளி மாணவர்கள் உபயோகப்படுத்தி வந்த மூன்று கழிப்பறைகள் போதுமானதாக இல்லாததால் தற்போது 60 கழிப்பறைகளை கட்டி உள்ளார். பள்ளி மாணவர்கள் போக்குவரத்து வசதிக்கென கடந்த மூன்று ஆண்டுகளில் 8 பேருந்துகள் வாங்கப்பட்டு மொத்தம் 13 பேருந்துகள் மேற்படியர்களால் இயக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் மதிய உணவு அருந்துவதற்காக பள்ளியின் நடுவே பல இலட்சம் ரூபாய் செலவில் சாப்பாட்டு ஹாலும், பள்ளி மைதானம் முழுவதும் பேவர் பிளாக் கல் பதிக்கப்பட்டும், மாணவர்கள் நல்ல குடிநீர் அருந்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல ஆயிரம் ரூபாய் செலவில் மினரல் வாட்டர் பிளாண்டும், மாணவர்களின் பாதுகாப்பினை கருதி பள்ளியை சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பியும், பராமரிக்கப் படாத இரண்டு அறிவியல் லேபுகள் முற்றிலும் சரி செய்யப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும், பள்ளி கட்டிடங்களில் வைக்கப்படாமல் இருந்த ஜன்னல்கள், கதவுகள் முறையாக பொருத்தப்பட்டும், மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பாடவாரியாக புதிய ஆசிரியர்கள் நியமனமும், அபாகஸ், யோகா, ஸ்போக்கன் இங்கிலீஸ் போன்ற பாடத் திட்டங்களும் மூன்றாம் வாதியான சேகர் அவர்களால் கடந்த மூன்று வருடங்களில் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் மேற்படி பள்ளியில் 12ம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் உள்ள மதிப்பெண்களை மாணவர்கள் மூன்றாம் வாதியின் பெரும் முயற்சியால் பெற்று வருகின்றனர். தாவா வழக்கில் 1ம் பிரதிவாதி மேற்படி டிரஸ்டினை நடத்தி வந்த 2000ம் முதல் 2012ம் வருடம் வரையான காலங்களில் எவருக்கும் எந்த ஒரு பொறுப்பும் கொடுக்கப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டு வந்தார். அதே போல் மூன்றாம் பிரதிவாதியான மலர்வேணி அவர்களும்

டிரஸ்ட் உறுப்பினர் என்ற முறையில் டிரஸ்டியாக எந்தவொரு செயலையும் முறையாக செய்தது இல்லை. 2012ம் வருடம் மேற்படி மூன்றாம் பிரதிவாதிக்கு அறக்கட்டளை தலைவராகவும் பொறுப்புகள் கொடுத்தும் அப்பணியை அவர் சரிவர செய்யவில்லை. 2012, 2013ம் வருடங்களில் மேற்படி மூன்றாம் பிரதிவாதி மதுரையில் உள்ள மருத்துவமனை ஒன்றில் மகப்பேறு சிகிச்சைக்காக சேர்ந்த காலங்களில் மேற்படி டிரஸ்ட் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. அதேபோல் இரண்டாம் பிரதிவாதியான பாலமுருகன் 2003ம் வருடமே அரசு பணிக்கு சென்று விட்டார். கடந்த சுமார் 13 ஆண்டுகள் மேற்படி டிரஸ்டுக்கோ அல்லது பள்ளிக்கோ எந்தவொரு பணியையும் மேற்படி இருவரும் செய்தது கிடையாது. ஆனால் மேற்படி இருவரும் மேற்படி பள்ளியின் அனுகூலங்கள் அனைத்தையும் தற்போது வரை பெற்று வந்துள்ளனர். மேலும் மேற்படி இரண்டாம் பிரதிவாதி சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தான் மேற்படி பள்ளியின் நிர்வாக விஷயங்களில் தலையிடுவதில்லை என்றும், கௌரவ உறுப்பினராக மட்டுமே தொடர்ந்து இருப்பேன் என்றும் கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் வாதிகள் பொறுப்பேற்ற பிறகு முறையாக மேற்படி அறக்கட்டளையின் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அந்த சம்பந்தமான ஆவணங்களும் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மு.வ.எண்.68/2013 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த பிரதிவாதிகள் மேற்படி டிரஸ்ட்க்கும், டிரஸ்டின் கூட்டங்களுக்கும் எதிரான வகையில் செயல்பட்டு வருகின்றனர். மேலும் பள்ளி நல்ல முறையில் நடந்து வருவதற்கும் இடையூறுகளை பிரதிவாதிகள் செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில், மேற்படி உண்மை விபரங்களை மறைத்து பொய்யான விபரங்களை கூறி 1ம் பிரதிவாதி வாதிகள் சேகர், ராணி மற்றும் இந்த 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மு.வ.எண். 68/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து, மேற்படி வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் டிரஸ்ட் கூட்டத்தை கூட்ட உத்தரவிட வேண்டியும் 20.05.2012-ம் தேதி முதல் அறக்கட்டளை மற்றும் பள்ளியின் கணக்கு வழக்குகளை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டியும், நிர்ணயிக்கப்பட்ட பள்ளி கல்வி கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டுமென உத்தரவிடக் கோரியும், அதிகமாக கட்டணம் வசூலித்திருந்தால் அதனை மாணவர்களுக்கு திரும்ப செலுத்த உத்தரவிடக கோரியும், இன்னபிற

பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வாதிகளும், பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர்களுக்கு கூட்டாக வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கூட்டாகவே எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளனர். மேலும் மேற்படி மு.வ.எண்.68/2013 வழக்கில் கல்வி கட்டணம் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனுக்கள் இரண்டும் மேற்படி சிவகங்கை சார்பு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன. அதனை எதிர்த்து இன்றைய தேதி வரை 1ம் பிரதிவாதி எந்த ஒரு பல்வகை மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் மேற்படி மு.வஎண்.68/2013 என்ற வழக்கில் டிரஸ்ட் கூட்டங்களை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்ட வேண்டும் என்று அனுமதிக்கப்பட்ட இடைநிலை மனுவினை எதிர்த்து இந்த வாதிகளும் சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் பல்வகை மேல்முறையீடு எண்.5/2014 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்து அம்மேல்முறையீடும் தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது.

மேற்படி மூல வழக்கு நிலுவையில் உள்ள போது 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தன் கைக்குள் போட்டுக் கொண்டு 22.05.2015 அன்று மாலை 4.00 மணியளவில் பள்ளி வளாகத்தில் அறக்கட்டளை கூட்டம் நடைபெறும் என்றும், 2015-16-ம் ஆண்டிற்கான அறக்கட்டளையின் தலைவர், செயலர் மற்றும் பொருளாளர் தேர்ந்தெடுத்தல் மற்றும் 2013-14, 2014-15-ம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகள் சமர்ப்பித்தல், பள்ளிக் கட்டணம் தொடர்பான கருத்துக்கள் விவாதித்தல், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் நியமனம் பற்றி விவாதித்தல் ஆகியவை கூட்டத்தின் பொருளாகும் என பிரதிவாதிகள் கூட்டாக 12.5.2015 தேதி அறிவிப்பு அனுப்பியிருந்தனர். அதனைப் பெற்றுக் கொண்ட வாதிகள் இராணி மற்றும் சேகர் ஆகியோர்கள் வழக்கறிஞர் மூலம் 15.5.2015 தேதியில் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினர். மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் 18.05.2015 தேதியிட்டு வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது. அதில் திட்டமிட்டபடி 22.5.2015ல் கூட்டம் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு கூட்டம் ஏதும் 22.05.2015ல் சாம்பவிகா பள்ளி வளாகத்தில் நடைபெறவில்லை. மேற்கண்ட சங்கதிகள் மூலம் 1ம் பிரதிவாதியும் தற்சமயம் 2, 3 பிரதிவாதிகளும் டிரஸ்ட் மற்றும் பள்ளியின் நலனுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார்கள் என்பது நன்கு புலனாகும். மேலும் 3, 4 வாதிகளால் பங்கு தொகை கொடுக்கப்பட்டு சேர்க்கப்பட்ட 1ம்

பிரதிவாதியின் மகனான பாரதிதாசன் என்பவரும் 2006ம் வருடம் முதல் டிரஸ்ட் உறுப்பினராக இருந்தாலும் அவர் பணி நிமித்தம் வெளி நாட்டில் இருந்ததால் டிரஸ்ட் கூட்டங்களில் முறையாக கலந்து கொள்ளவில்லை. அதன்பின் தற்போது மேற்படி டிரஸ்ட் உறுப்பினர் பதவியினை இராஜினாமா செய்வதாக மேற்படி பாரதிதாசன் கடந்த 18.04.2015 அன்று இந்த வாதிகள் உள்பட டிரஸ்டின் மற்ற உறுப்பினர்களுக்கு பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் கூடிய அஞ்சலில் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி பாரதிதாசனும் தற்போது மேற்படி டிரஸ்டில் டிரஸ்ட் உறுப்பினராக இல்லாத்தால் மேற்படியாரும் தாவா வழக்கில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில், 20.05.2012 வரையான டிரஸ்டின் கணக்கு வழக்குகளையும், 20.05.2012ந்தேதி வரை பள்ளி யின் வரவு செலவு கணக்குகளையும் 1ம் பிரதிவாதி ஒப்படைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எனவே, வாதிகளால் இந்த வழக்கு இந்நீதிமனறத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

<u>**3) 4-ம் பிரதிவாதி 5ம் வாதியாக transpose செய்யப்பட்டுள்ளார். அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்-**</u>

தாவா அறக்கட்டளையின் முன்னாள் உறுப்பினர் K.பாரதிதாசன் அவர்கள் தாவா அறக்கட்டளையில் இருந்து விலகி கொள்வதாக அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் கடிதம் ஒன்றினை அனுப்பினார். மேற்படியாரின் கோரிக்கையும் அறக்கட்டளை தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி K.பாரதிதாசன் அவர்களும் அறக்கட்டளை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி அறக்கட்டளையின் உறுப்பினராக ஆவண எண்.14/2016 என்ற எண்ணில் அறக்கட்டளை திருத்தல் ஆவணம் மூலம் அறக்கட்டளை உறுப்பினராக சேர்க்கப் பட்டுள்ளார்.

தாவா வழக்கில் 4ம் பிரதிவாதியும் தாவா அறக்கட்டளையின் உறுப்பினரான பிறகு தாவா அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பங்காற்றி வருகிறார். இந்நிலையில் 1ம் பிரதிவாதி (RM. காசி) மற்றும் 2, 3 பிரதிவாதிகள் (பாலமுருகன், மலர்வேணி தாவா அறக்கட்டளையின் கூட்டத்திற்கு ஒரு முறை கூட வராமலும், கூட்டங்களுக்கு வராதது சம்பந்தமாக யாதொரு தகவலும் தெரிவிக்காமலும் இருந்து வந்தார்கள். அதேபோல் மேற்படி 2ம் பிரதிவாதி அரசுப் பள்ளியில் இருந்து வந்ததாலும்

மேற்படி மூவரும் அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இல்லாமலும், ஒத்துழைப்பு வழங்காததாலும் தாவா அறக்கட்டளை மற்றும் பள்ளிகளுக்கு பல இன்னல்களையும், இடையூறுகளையும் பல வகைகளில் செய்து வந்ததாலும் கடந்த 15.07.2017-ம் தேதியில் இருந்து மேற்கண்ட 1ம் பிரதிவாதி (RM.காசி) மற்றும் 2, 3 பிரதிவாதிகள் (பாலமுருகன், மலர்வேணி) தாவா அறக்கட்டளையின் கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி அறக்கட்டளை மேற்படி உறுப்பினர்கள் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தாவா அறக்கட்டளை ஆவணத்திலும் கடந்த 19.12.2017-ம் தேதி மேற்படியார்களின் நீக்கங்கள் குறித்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் பிரதிவாதியும் மேற்படி ஆவண எண்.14/2016-ஐ ஆட்சேபனை செய்து சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மேற்படி ஆவணத்தினை ரத்து செய்யக் கோரி மனு அளித்ததில் மேற்படி மனுவும் செ.மு.எண்.2080/இ1/2022 என்ற எண்ணில் எண்ணிடப்பட்டு, இரு தரப்பு விசாரணைக்கு பிறகு கடந்த 31.10.2022-ம் தேதி உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 2017ம் ஆண்டு முதல் 4ம் பிரதிவாதியும் தாவா அறக்கட்டளையின் கூட்டத்தில் கலந்து கொண்டு வருகிறார். 2017ம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை 1, 2, 3 பிரதிவாதிகள் தாவா அறக்கட்டளை கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. மேலேகண்டபடி மேற்படியார்கள் நீக்கம் செய்யப்பட்டு விட்டதால் மேற்படியாளர்கள் கலந்துகொள்ளவில்லை. மேலும் 2017 வருடம் முதல் மேற்படியார்களுக்கும் தாவா அறக்கட்டளைக்கும் யாதொரு சம்பந்தமோ, தொடர்போ, உரிமையோ இல்லை.

### 4) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்-

இந்நீதிமன்றத்தில் OS.No.68/2013, டி.மு. நீதிமன்றம், சிவகங்கை OS.No.558/2019, OSNo.559/2019 ஆகிய எண்களிலும் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்-கிளையில் பள்ளி முகவாண்மைக் குழுவிற்கு ஒப்புதல் கேட்டு WP(MD) 22086/2016 ஆகிய எண்ணில் பதிவாகி உள்ள வழக்குகள் நிலுவையில் இருப்பதை மறைத்தும் மற்றும் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் நிறுவனர்களாகிய 5,6,7 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் 18.11.1999 அன்று, சிவகங்கை-1 நிர் இணை சார்பதிவகத்தில் 4 புத்தகம் 28 தொகுதி 15 முதல் 25 வரை பக்கங்களில்

1999 ம் வருஷத்திய 167 நிர் ஆவணமாக பதிவு செய்யப்பட்ட சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் முதன்மை ஆவணத்தில் (PRINCIPLE DEED) தெரிவிக்கப்பட்டுள்ள விதி எண்.17-" The Board of Trustees shall have power to co-opt other trustees, but in any event the total number of trustees shall not exceed six" -ன் படி ஏற்கனவே ஆறு நபர்கள் மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டியாக உள்ள நிலையில் கூடுதலாக ஒரு நபரை, ஏழாவது டிரஸ்டியாக மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டியாக சேர்க்க மேற்படி அறக்கட்டளையின் முதன்மை ஆவணத்தில் எந்த விதிகளும் இல்லை. இந்த சூழ்நிலையில் சட்டப்பூர்வ அதிகாரம் இல்லாமல், நேர்மையற்ற முறையில் (without lawful authority and dishonestly) போலியான ஆவணம் தயார் செய்யப்பட்டு எம்.எஸ்.கார்த்திகேயன் ( வாதியின் இளையமகன்) என்பவரை ஏழாவது டிரஸ்டியாக சேர்த்து துணை ஆவணம் என்ற பெயரில் 23.03.2016 அன்று சிவகங்கை சார்பதிவக நிர்- 1 ன் அலுவலகத்தில் புத்தகம் 4 ஆவணம் 14/2016 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்ஙனம் மேற்படி அறக்கட்டளையின் உபவிதிகளை பின்பற்றாமல் மேற்படி அசல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது சட்ட விதிகளுக்கு எதிராக உள்ளது.

மேற்படி அறக்கட்டளையின் நிறுவனர்களாகிய 5,6,7 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக பதிவு செய்யப்பட்ட மேற்படி ஆவணத்தை இரத்து செய்ய வேண்டி சிவகங்கை மாவட்ட பதிவாளர் (நிர்) அவர்களிடம் 5,6,7 பிரதிவாதிகள் மூவரும் சேர்ந்து 02.06.2022 அன்று புகார் மனு அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் 20.07.2022, 24.08.2022 & 07.10.2022 ஆகிய நாள்களில் சிவகங்கை மாவட்ட பதிவாளர் (நிர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பிரதிவாதிகளால் எழுத்துப் பூர்வமாக வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் சான்று ஆவணங்கள் வழியாக காணப்பெற்ற நியாயத்தின் அடிப்படையில் மதிப்புமிகு சிவகங்கை மாவட்டப் பதிவாளர் (நிர்) அவர்கள் 31.10.2022 அன்று மாவட்டப்பதிவாளர் (நிர்) சிவகங்கை நடவடிக்கைகள் எண் செ.மு.எண் 2080/ இ 1/2022 நாள்:31.10.2022 என்ற எண்ணில் இறுதி ஆணை பிறப்பித்துள்ளார். மேற்படி இறுதி ஆணையில் விசாரணை அலுவலர் மதிப்புமிகு சிவகங்கை மாவட்டப் பதிவாளர் (நிர்) தன்னுடைய கண்டுபிடிப்புக்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு இறுதி ஆணை பத்தி 3- ல் தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதி 1982-2(d)ன் படி தாவாச்சொத்தின்

உரிமை தொடர்பான முன் ஆவணங்களைப் பரிசீலிக்காமல் ஆவணம் தயார் செய்துள்ளது தெரியவருகிறது.

பத்தி 4 ல் 'பதிவு அலுவலர் ஆவணப் பதிவு நாளில் ஆவண வாசகங்களின் அடிப்படையிலும் பதிவுச்சட்டம் 1 விதி 55 மற்றும் பார்வை (1) முதல் (4) வரையில் காணும் சென்னை பதிவுத்துறைதலைவர் அவர்களின் சுற்றறிக்கைளின்படி செயல்பட்டுள்ளதும், ஆனால் சிவகங்கை 1- நிர் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 14/2016 பதிவின்போது டிரஸ்ட் தொடர்பான துணை விதிகள் மற்றும் முன் ஆவணங்களைச் சரிபார்க்கத் தவறியுள்ளதும் அறிய நேர்கிறது"

பத்தி 6- "இருப்பினும், சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 167/1999 ( 18.11.1999) ல் "The Board of Trustees shall have power to co-opt other trustees, but in any event the total number of trustees shall not exceed six" எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் பின்னர், சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் கா.பாரதிதாசன் என்பவர் விலகியதைப் பொறுத்து எவ்வித துணை ஆவணமும் பதிவு செய்யாததால், மேற்படி சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் ஏற்கனவே, ஆறு டிரஸ்டிகள் உள்ள நிலையில் கார்த்திகேயன் என்பவரை டிரஸ்டியாக சேர்க்க வேண்டி பதிவு செய்யப்பட்ட சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 14/2016 ஐ அடிப்படையாகக் கொண்டு எவ்வித ஆவணப் பதிவும் மேற்கொள்வது கூடாது என ஆவணத்திலும், அட்டவணையிலு உரிய குறிப்புகள் சேர்க்க சார்பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்படி விசாரணை அலுவலர் மதிப்புமிகு சிவகங்கை மாவட்ட பதிவாளர் (நிர்) அவர்கள் உறுதியாக தெரிவித்திருப்பதிலிருந்து, அதாவது முன் ஆவணங்களைப் பரிசீலிக்காமல் தயார் செய்யப்பட்ட ஆவணத்தினை டிரஸ்ட் தொடர்பான துணை விதிகள் மற்றும் முன் ஆவணங்களைச் சரிபார்க்காமல் எம்.எஸ். கார்த்திகேயன் என்பரை மேற்படி அறக்கட்டளையில் ஏழாவது டிரஸ்டியாக சேர்த்து துணை ஆவணம் என்ற பெயரில் 23.03.2016 அன்று சிவகங்கை சார்பதிவக நிர்-1 பதிவு செய்த புத்தகம் 4 ஆவணம் எண்.14/2016 ஆனது பதிவுச் சட்டம், 1908 இன் பிரிவு(5-A) ன் படி ஓர் போலியான ஆவணம் (Forged Document) என்பதால் மேற்படி போலி ஆவணமானது மேற்படி அறக்கட்டளையின் முதன்மை ஆவணத்திற்கு (Principle

Deed Document) துணை ஆவணமாக ( supplementary Deed) எக்காலத்திலும் செல்லத்தக்கதல்ல. மேலும், பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்கள் சுற்றறிக்கை எண்:20217/யு1/2021 நாள் 09.07.2021 ல் பக்கம் 4ல் பத்தி 6ல் 'Forged document shall have the same meaning assingned to it in section 470 of the Indian Penal code 1860'- என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்திய தண்டனைச் சட்டம் 1860 ல் உள்ள பிரிவு 463, 464, 470ன் கீழ் 23.03.2016 அன்று சிவகங்கை சார்பதிவக நிர்-1 ல் 14/2016 என்ற எண்ணில் பதிவான ஆவணம் ஓர் மோசடி மற்றும் போலி ஆவணமாகும். (Forged Document). எனவே, அவை எந்தக்காலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வர வாய்ப்பில்லை என்பதை தெளிவாக அறிய முடிகிறது. இத்தகைய பதிவு செய்யப்பட்டபோலியான ஆவணங்கள் வழக்கிற்கு உகந்ததல்ல.

சாம்பவிகா கல்வி அறக்கட்டளையானது ஓர் குடும்ப அறக்கட்டளை (Family Trust) கிடையாது. இது ஒரு public Trust ஆகும். சேகர் மற்றும் அவரது மனைவி சே.இராணி ஆகியோர்கள் தொடர்ந்து மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டிகளாக இருக்கும்போது அறக்கட்டளையின் விதி எண்15(ii) ன் படி (Every Trustee shall be succeeded by the eldest son or as emulgated in the Hindu succession Act hereditary ( after the death or retirement of the trustee) in a meeting specially convened for the purpose before the 31st March of the proceeding financial year) A.M.சேகர் அல்லது அவரது மனைவி சே. இராணி ஆகிய இருவரில் ஒருவர் அறக்கட்டளையிலிருந்து ஓய்வு பெற்ற பின்புதான் அல்லது இராஜினாமா செய்த பின்புதான் தங்களது வாரிசுகளில் அதுவும் மூத்தமகனை அறக்கட்டளையில் உறுப்பினராக சேர்க்கமுடியும். எனவே, 23.06.2016 அன்று மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டியாக பதிவு செய்யப்பட்ட சே.கார்த்திகேயன் என்பவர் சேகர் மற்றும் சே.இராணி ஆகியோர்களின் அவர்களில் மூத்த மகன் கிடையாது. மேற்படி அறக்கட்டளையின் முதன்மை ஆவணத்தின் விதிகளுக்கு எதிராகவும் மற்றும் Indian Trust Act 1882 பிரிவு 48 அதாவது Co-trustees cannot act singly. When there are more trustees than one, all must join in the execution of the trust, except where the instrument of trust otherwise provides -என்ற சட்ட விதிகளுக்கு எதிராக AM.சேகர் மற்றும் சே.இராணி ஆகிய இருவரும் மேற்படி அறக்கட்டளைக்கு சொந்தமான பலகோடி மதிப்பிலான

அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அபகரிக்கும் நோக்கில் பல உண்மைகளை மறைத்து போலியாக ஆவணம் தயார் செய்து, தங்களது சொந்த நலனுக்காகவே மேற்படி இருவரும் முதலில் தங்களுடைய இளைய மகனான எம்.எஸ்.கார்த்திகேயன் என்பவரை மேற்படி அறக்கட்டளையில் 23.03.2016 அன்று டிரஸ்டியாகவும், பின்னர் அதே குடும்பத்தைச் சார்ந்த மேற்படியார்களின் மூத்த மகனான சே.பார்த்தீபன் என்பவரையும் 19.11.2017 அன்று மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டுள்ளது வழக்கிற்கு உகந்ததல்ல. மேற்படி A.M.சேகர் மற்றும் ஆகிய இருவரும் தங்களது இரு மகன்களை டிரஸ்டிகளாக சேர்த்தது 5,6,7 பிரதிவாதிகளை உள்ளடக்கிய 6 நபர்களுக்கு பாத்தியப்பட்ட மேற்படி டிரஸ்டிற்கு சொந்தமான பல கோடி மதிப்பிலான சொத்துக்களை தங்களுடைய குடும்ப சொத்தாக மாற்றும் நோக்கத்திற்காகவே 5,6,7 பிரதிவாதிகளை ஏமாற்றி தீய எண்ணத்தில் செயல்பட்டுள்ளதை தெளிவாக தெரியவருகிறது.

A.M.சேகர் மற்றும் அவரது மனைவி சே.இராணி ஆகிய இருவரும் அறக்கட்டளையின் ஆவணத்தின் விதி எண்.20( பக்கம் 8) The meeting of the board of trustees shall be held atleast once in two months, but any number of other meeting may be held as and when considered necessary. ன் படி அறக்கட்டளையின் அறங்காவலர்குழு கூட்டம் நடத்துவதற்கு தடைகேட்டு சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் CMA No.4/2014 என்ற எண்ணில் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீது இறுதி முடித்து வைக்கப்பட்டது. A.M.சேகர் மற்றும் அவரது மனைவி சே.இராணி ஆகிய இருவரும் 5,6,7 பிரதிவாதிகளை உள்ளடக்கிய 6 நபர்களுக்கு சொந்தமான சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் பொதுச் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கோடு பிரதிவாதிகளுக்கு தெரியாமல் அறக்கட்டளையின் அறங்காவலர் குழுக் கூட்டம் நடத்தாமல் தங்களது இரு மகன்களையும் மேற்படி அறக்கட்டளையின் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், இந்திய தண்டனைச் சட்டம் 1860 ல் உள்ள பிரிவு 463,464, 470 ன் கீழ் ஓர் மோசடி மற்றும் போலி ஆவணங்கள் என்பதால் மேற்படி வழக்கிற்கு உகந்ததல்ல.

சிவகங்கை மாவட்டப்பதிவாளர் (நிர்) அவர்களின் நடவடிக்கைகள் எண் செ.மு.எண் 2020/இ1/ 2022 நாள் 31.10.2022-ன் இறுதி ஆணையில் பிறப்பித்துள்ள உத்தரவின் படி அதாவது ஏற்கனவே, ஆறு டிரஸ்டிகள் உள்ள நிலையில்

கார்த்திகேயன் என்பவரை டிரஸ்டியாக சேர்க்க வேண்டி பதிவு செய்யப்பட்ட சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண்.14/2016 ஐ அடிப்படையாகக் கொண்டு எவ்வித ஆவணப் பதிவும் மேற்கொள்வது கூடாது என ஆவணத்திலும், அட்டவணையிலும் உரிய குறிப்புகள் சேர்க்க சார்பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேற்படி கார்த்திகேயன் என்பவரை டிரஸ்டியாக சேர்த்து பதிவு செய்யப்பட்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என்பது ஊர்ஜிதமாவதால், மேற்படி நபர் மேற்படி அறக்கட்டளையில் டிரஸ்டியாக செயல்பட சாத்தியமில்லை. இந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு A.M.சேகர் மற்றும் சே.இராணி ஆகிய இருவரின் மூத்த மகனான சே.பார்த்தீபன் என்பவரையும் மேற்படி அறக்கட்டளையில் உறுப்பினராக சேர்க்ககப்பட்டதால் மேற்படி ஆவணமும் செல்லத்தக்கதல்ல எனவே மேற்படி வழக்கிற்கு உகந்ததல்ல.

மேற்படி வழக்கில் 5,6,7 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் டிரஸ்டியாக சேர்க்கப்பட்ட இந்த நபர்களின் பங்களிப்பு டிரஸ்டிற்கு எதுவும் இல்லாத நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களை மேற்படி கல்வி அறக்கட்டளையில் தனிப்பட்ட முறையில் லாபம் அடையும் நோக்கோடு சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வழக்கையும் முறையாக விசாரணை செய்ய நடத்த முயற்சி செய்யாமல் வீண்காலம் கடத்தும் பொருட்டு இந்த நிர் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே வாதிகளின் வழக்கை 5, 6, 7 பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5)** வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை 27.03.2017-ம் தேதி வனைந்துள்ளது.

**Issues:**

1) சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்று விட்டது என்பது சரியா?

2) 1ம் பிரதிவாதி வாதி கல்வி அறக்கட்டளையின் தலைவர் மற்றும் செயலாளராக செயல்பட்ட பொழுது அறக்கட்டளையின் கணக்குகளை முறையாக ஒப்படைக்காமல் இருந்து வந்தார் என்பது சரியா?

3) 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டு முறையீடு செய்துள்ளார் என்பது சரியா?

4) தாவா பரிகாரங்கள் காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது சரியா?

5) 1ம் பிரதிவாதி 20.05.2012-ம் தேதி வரையிலான 1ம் வாதி அறக்கட்டளை மற்றும் 2ம் வாதி பள்ளியின் வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என்ற பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

6) வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

7) தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

**6)** வாதிகள் தரப்பில் 5-ம் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கார்த்திகேயன் த/பெ பெருமாள் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. கலைமணி என்பவர் வா.சா.3 ஆக விசாரனை செய்யப்பட்டு சா.சா.ஆ.3 முதல் சா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.23 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7**) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

8) **<u>எழுவினாக்கள்-2, 3 மற்றும் 5-ற்கான தீர்வு -</u>**

தாவா அசல் வழக்கானது முதலில் 1 முதல் 4 வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு அதன்பிறகு தாவா வழக்கில் 4 ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட வரை 5 ஆம் வாதியாக மாற்றம் செய்து தற்போது 1 முதல் 5 வாதிகள் தாவா வழக்கில் வாதிகளாக உள்ளனர். தாவா வழக்கானது 1 ம் பிரதிவாதி 20.05.2012 வரையிலான சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உண்மையான மற்றும் சரியான வரவு செலவு கணக்குகளை வாதிகள் வசம் ஒப்படைக்கும் படியும் 1 ம் பிரதிவாதி 20.05.2012 வரையிலான சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியின் உண்மையான மற்றும் சரியான

வரவு செலவு கணக்குகளை வாதிகள் வசம் ஒப்படைக்கும் படியும், சாம்பவிகா கல்வி அறக்கட்டளை கூட்ட அறிவிப்பு அனுப்ப பிரதிவாதிகளுக்கு நிரந்தர தடை விதித்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகள் வழங்கிட கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வழக்கிடப்பட்டுள்ளது.

**9**) சாம்பவிகா கல்வி அறக்கட்டளை 18.11.1999 ம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் முத்துக்கண்ணன்,சரவணன், கணேசன் ஆகியோர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பதனையும் 15.12.2000 ம் தேதி சாம்பவிகா மேல்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது என்ற சங்கதி பிரதிவாதிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேற்படி அறக்கட்டளையிலிருந்து 3 உறுப்பினர்கள் விலகியதை அடுத்து ஏ.எம். சேகர், ராணி மற்றும் பாரதிதாசன் ஆகியோர் அறக்கட்டளையின் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு மேற்சொன்ன 1 முதல் 3 பிரதிவாதிகள் 3, 4 வாதிகள் மற்றும் பாரதிதாசன் ஆகிய 6 நபர்கள் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக உள்ள நிலையில் அறக்கட்டளையின் முன்னாள் உறுப்பினர் k.பாரதிதாசன் அவர்கள் அறக்கட்டளையில் இருந்து விலகி கொள்வதாக கடிதம் அனுப்பியதின் பேரில் மேற்படி கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மேற்படி பாரதிதாசன் அறக்கட்டளை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு தாவா வழக்கின் 5 ம் வாதியான எம். எஸ். கார்த்திகேயன் அறக்கட்டளையின் உறுப்பினராக ஆவண எண் 14/16 மூலமாக அறக்கட்டளை திருத்தல் ஆவணம் மூலம் சேர்க்கப்பட்டார் என்றும் மேற்படி ஆவண எண் 14/16 ஐ இரத்து செய்திட கோரி சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களிடம் செ.மு.எண் 2080/இ1/2022 என்ற எண்ணில் தாக்கல் செய்த மனுவும் இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு கடந்த 31.10.2022 ம் தேதி உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் சொல்லப்பட்ட சங்கதி குறித்து

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர் வழக்குரையில் 18.11.1999 ம் தேதிய சாம்பவிகா கல்வி அறக்கட்டளை பத்திரத்தில் விதி எண் 17 ல் The Board of Trustee shall have power to co-opt other trustees. But in any event the total number of trustee shall not exceed six என உள்ளது என்றும் அதன் படி சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் 6 உறுப்பினர்கள் உள்ள நிலையில் 5 ம் வாதி

கார்த்திகேயன் 7 வது உறுப்பினராக சேர்க்கப்பட்டது ஆவணம் எண் 14/2016 சட்ட விதிகளுக்கு எதிரானது என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

**10**) மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்படும் கூடுதல் எதிர்வழக்குரை சங்கதியை ஆட்சேபித்து வாதிகள் தரப்பில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரான பாரதிதாசன் ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டு அவருக்கு பதிலாகத்தான் கார்த்திகேயன் ஆவண எண் 14/2016 ன் கீழ் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார் என்றும் மேற்படி ஆவண எண் 14/2016 ன் படி 5 ம் வாதி கார்த்திகேயன் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் ஆவார் என்றும் மேற்படி நடைமுறை சட்டவிதிகளுக்கு எதிரானது அல்ல என தெரிவிக்கப்பட்டது.

**11**) மேற்படி சங்கதி குறித்து பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை சங்கதியில் மேற்படி கார்த்திகேயன் என்பவர் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக ஆவண எண் 14/2016 மூலமாக நியமிக்கப்பட்டது குறித்து சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களிடம் புகார் மனு கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றதில் 31.10.2022 ல் இறுதிஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆணையில்

"பதிவு அலுவலர் ஆவணப்பதிவு நாளில் ஆவண வாசகங்களின் அடிப்படையிலும் பதிவுச் சட்டம் 1 விதி 55 மற்றும் பார்வை (1) முதல் (4) வரையில் காணும் சென்னை பதிவுத்துறைதலைவர் அவர்களின் சுற்றறிக்கைகளின் படி செயல்பட்டுள்ளது. ஆனால் சிவகங்கை 1 நிர் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 14/2016 பதிவின் போது டிரஸ்ட் தொடர்பான துணை விதிகள் மற்றும் முன் ஆவணங்களைச் சரிபார்க்கத் தவறியுள்ளதும் அறிய நேர்கிறது. இருப்பினும் சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 167/1999 (நாள் 18.11.1999) ல் " The Board of trustee shall have power to co - opt other trustee, but in any event the total number of trustees shall not exceed six" எனக் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பின்னர் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் கா. பாரதிதாசன் என்பவர் விலகியதை பொறுத்து எவ்வித துணை ஆவணமும் பதிவு செய்யாததால் மேற்படி சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் ஏற்கனவே ஆறு டிரஸ்டிகள் உள்ள

நிலையில் கார்த்திகேயன் என்பவரை டிரஸ்டியாக சேர்க்க வேண்டி பதிவு செய்யப்பட்ட சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக 4 புத்தக ஆவண எண் 14/2016 ஐ அடிப்படையாக கொண்டு எவ்வித ஆவணப்பதிவும் மேற்கொள்வது கூடாது என ஆவணத்திலும், அட்டவணையிலும் உரிய குறிப்புகள் சேர்க்க சார்பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது". என கூறப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட சங்கதியை வாதிகள் தரப்பில் மறுத்திட வில்லை. மேற்சொன்ன சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களின் 31.10.2022 ம் தேதிய நடவடிக்கை எண் செ.மு.எண் 2080/இ1/2022 ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் படி தாவா வழக்கின் 5 ம் வாதியான எம்.எஸ். கார்த்திகேயன் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 14/2016 ஐ பொருத்து துணை விதிகள் மற்றும் முன் ஆவணங்களை சரிபார்க்க தவறியுள்ளது என்பதையும் மேற்படி ஆவணத்தை அடிப்படையாக கொண்டு எவ்வித ஆவணப் பதிவும் மேற்கொள்ள கூடாது என்பதையும் பார்க்கையில் எம்.எஸ். கார்த்திகேயன் என்பவர் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்து ஆவணங்கள் எதுவும் பதிவு செய்திட இயலாது என்பதை அறிய முடிகிறது.

**12**) மேற்படி சூழலில் 1, 3 பிரதிவாதிகளை 15.07.2017 ம் தேதிய அறக்கட்டளை கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆக இருந்ததை நீக்கம் செய்ததாக சொல்வதில் அறக்கட்டளையின் 6 உறுப்பினர்களில் ஒரு உறுப்பினராக இல்லாத எம்.எஸ்.கார்த்திகேயன் உள்ளதால் மேற்படி நடவடிக்கை சட்டப்படி செல்லாத ஒன்று என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்கும் படி உள்ளது. மேற்சொன்ன சிவகங்கை மாவட்ட பதிவாளர் பிறப்பித்த ஆணையின் படி 1 முதல் 3 பிரதிவாதிகளும் 3, 4 வாதிகள் மற்றும் பாரதிதாசன் ஆகியோர் மட்டுமே சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் என்பதையும் மேற்படி நபர்களை தவிர எம்.எஸ். பார்த்திபனோ, எம்.எஸ்.கார்த்திகேயனோ மேற்படி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் என்ற வாதிகளின் கட்சி 18.11.1999 ம் தேதிய அறக்கட்டளை விதிகளுக்கு எதிரானது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் மேற்படி அறக்கட்டளை விதிப்படி ஏற்கும் படி உள்ளது. ஏனெனில் வாதிகள் குறிப்பிடுவது போன்று சாம்பவிகா கல்வி அறக்கட்டளையிலிருந்து 1 முதல் 3 பிரதிவாதிகளையும் பாரதிதாசனையும் மேற்படி

அறக்கட்டளை விதிமுறைப்படி விலக்கிடாத நிலையில் மேற்படி நபர்கள் அறக்கட்டளையின் உறுப்பினர்களே என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்கும் படி உள்ளது.

**13**) மேற்கண்ட சங்கதிகளின் படி ஆவண எண் 14/2016 ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஆவணப்பதிவும் மேற்கொள்ளகூடாது என்ற நிலையில் மேற்படி ஆவணத்தை அடிப்படையாக கொண்டு அதன் பிறகு மேற்கொள்ளப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையவை அல்ல என்றும் அதனடிப்படையில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் என்ற தகுதியில் தாவா வழக்கில் 5 ம் வாதி நடவடிக்கை எதுவும் தொடர உரிமை இல்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்புடைய ஒன்றே என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**14**) தாவா வழக்கில் 5 ம் வாதி வாசா 1 ஆக சாட்சியமளித்துள்ளார். 5 ம் வாதி தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் 1 ம் வாதி அறக்கட்டளை மற்றும் 2 ம் வாதி பள்ளியின் கணக்குகளை பார்த்தேன் என்ற முறையில் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாக கூறியும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்தும் சாட்சியமளித்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணமானது 18.11.1999-ம் தேதிய அறக்கட்டளை பத்திரத்தின் நகலாகும். மேற்படி பத்திரம் நகல் என்பதால் குறியீடு செய்துகொள்ள பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டாலும் மேற்படி அறக்கட்டளை பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்பதும் பத்திரத்தின் சங்கதிகளை ஒப்புக்கொண்டு உபய வாதிகள் கட்சி செய்துள்ள நிலையில் வா.சா.ஆ.1 ஏற்புடைய ஆவணமாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.ஆ.2 ஆவணமானது 07.03.2012-ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 OS No.68/13 வழக்குரை சார்பு நகல் வா.சா.ஆ.4 O.S.No.68/13 எதிர்வழக்குரை சார்பு நகலாகும் வா.சா.ஆ.2-ன் படி 1ம் பிரதிவாதிக்கு டிரஸ்டின் செயல்பாடுகள் குறித்தும், கணக்கு வழக்குகள் கேட்டும் அனுப்பபட்ட சட்ட அறிவுப்பு ஆகும்.

**15**) வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் சான்று நகலாகும். மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்களில் 1 முதல் 3 பிரதிவாதிகள் சாம்பவிகா கல்வி அறக்கட்டளை மற்றும் சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியின்

20.05.2012-ம் தேதி வரையிலான வரவு செலவு கணக்குகள் குறித்தோ மேற்படி வரவு செலவுகளை முறையற்ற முறையில் 1ம் பிரதிவாதி பயன்படுத்தினார் என்ற சங்கதி குறித்தோ மேற்படி அறக்கட்டளை விதிமுறைக்கு முரனாக 1ம் பிரதிவாதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றோ எடுத்துக்காட்டிடும் வகையில் இல்லை. மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.1 மேற்படி சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் பதிவு பத்திர நகல் என்பதும் அதன் அடிப்படையில் அறக்கட்டளையின் நோக்கம் நடவடிக்கை குறித்தும் அறிந்துகொள்ள முடிகிறது. வா.சா.ஆ.2 அறிவிப்பானது 1ம் பிரதிவாதிக்கும் மாறன் என்பவருக்கும் 3, 4 வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பாகும். மேற்படி அறிவிப்பில் அறக்கட்டளையின் கூட்டத்தை 2 மாதங்களுக்கு ஒருமுறை கூட்ட வேண்டும் என்றும் அறக்கட்டளை ஏஜென்சியின் வரவு செலவு விபரம் மற்றும் அறக்கட்டளை ஏஜென்சியின் அனைத்து வித நிர்வாக மற்றும் மேனேஜ்மெண்ட்க்கான அனைத்து பண விபரத்தையும் 2006-ம் வருடம் முதல் கேட்டும், பள்ளி முகவாண்மை மற்றும் புதிய பள்ளி குழு அமைத்திடவும் மற்றும் அலுவலக சிப்பந்திகள் தேர்வு சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திட வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அறக்கட்டளை முகவாண்மை, பள்ளி முகவாண்மை ஒன்று இருப்பது குறித்து பிராதிலோ, சாட்சிய நிரூபன வாக்கு மூலத்திலோ எவ்வித சங்கதியும் குறிப்பிடவில்லை. மேலும் 5ம் வாதி தனது குறுக்கு விசாரனை சாட்சியத்தின் போது. “அறக்கட்டளை ஆரம்பித்த 1999ம் வருடம் தெரியாது. அப்போது தனக்கு வயது 7 என்றும், சாம்பவிகா பள்ளி ஆரம்பித்த நாள் முதல் 2012ம் ஆண்டு வரை 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளின் ஒவ்வொரு ஆண்டும் 100 சதவீதம் மாணவர்களின் தேர்ச்சி இருந்தது என்றால் அந்த விவரம் தெரியாது என்றும் அறக்கட்டளையின் பைலாவின்படி அங்கீகரிகப்பட்ட 2 வங்கி கணக்குகள் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது என்றும் பள்ளி கூடத்திற்கு அங்கீகாரம் இருந்தால் மட்டுமே பொது தேர்வு எழுதிட அரசு அனுமதிக்கும் என்றால் சரிதான். தாவா வழக்கு முதலில் சிவகங்கை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் தெரியாது என்றும், பள்ளிக்கூடத்தில் முத்துக்கண்ணன் தலைமை ஆசிரியராகவும், மாறன் உதவி தலைமை ஆசிரியராகவும் இருந்தார்கள் என்றால் தெரியாது என்றும் 2000 ம் ஆண்டு முதல் 2006 ம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் அறக்கட்டளையின் தலைவர்,

பொருளாளர், செயலாளர் போன்றோர் அறக்கட்டளை விதிமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை என்றும் முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகியோர் 2006ம் வருடத்திற்கு முன்பு அறக்கட்டளையின் வருவாயை முறைகேடாக பயன்படுத்திக்கொண்டார்கள் என பிராதில் குறிப்பிடும் சங்கதி குறித்து காவல் துறையிலோ, நீதிமன்றத்திலோ புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது என்றும் முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகிய மூவரும் அறக்கட்டளையில் இருந்து விலகிய சமயத்தில் அறக்கட்டளையின் சார்பாக வருமானம் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது கொடுத்தப்பட்டிருக்கலாம், எனது அப்பா, அம்மா சாம்பவிகா பள்ளியிலும், அறக்கட்டளையிலும் உறுப்பினராக சேர்வதற்கு நிதி எதுவும் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. கொடுக்கப்பட்டிருக்கலாம். அறக்கட்டளையில் உறுப்பினரை சேர்க்கவும், நீக்கவும் by law ல் எந்த விதி உள்ளது என்றால் by lawவை பார்த்தால் சொல்ல முடியும் என்றும்

by lawவில் அறக்கட்டளையில் மொத்தம் அதிக பட்சமாக எத்தனை உறுப்பினர்கள் இருக்கலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் by law வை பார்த்தால் சொல்ல முடியும் என்றும் புதிதாக ஒரு உறுப்பினர் சேர்பதற்கு ஏற்கனவே உள்ள உறுப்பினர்கள் ஒன்று கூடி தீர்மானம் நிறைவேற்றி தான் சேர்க்க முடியும் என by law ல் விதி உள்ளது என்றால் by lawவை பார்த்தால் சொல்ல முடியும், அறக்கட்டளை கூட்டம் 2 மாதத்திற்கு ஒருமுறை கூட்டவேண்டும் என்ற விவரம் தெரியாது என்றும், அறக்கட்டளையில் புதிதாக ஒருவரை உறுப்பினராக சேர்க்க அறக்கட்டளை உறுப்பினர்கள் எத்தனை பேர் சம்மதம் வேண்டும் என்றால் by lawவை பார்த்தால் சொல்லமுடியும் என்றும் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் அதிகபட்சம் 6 நபர்கள் உறுப்பினர்களாக இருக்கலாம் என by law வில் உள்ளது என்றால் சரிதான். பாரதிதாசன் அறக்கட்டளையில் இருந்து விலகி கொள்வதாக கடிதம் கொடுத்துள்ளாரா என்றும் அது குறித்து அறக்கட்டளை திருத்தல் பத்திரம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் கடிதம் கொடுத்தார். திருத்தல் பத்திரம் பதிவு செய்யப்பட வில்லை என்றும் 2009, 2010, 2011 மற்றும் 2012 நிதி ஆண்டுகளில் அறக்கட்டளையின் தலைவர், பொருளாளர், செயலாளர் யார் என்றால் தெரியாது. அறக்கட்டளையின் by law வில் உள்ள எந்த விதிப்படி உறுப்பினராக

சேர்க்கப்பட்டேன் என்றால் தெரியாது என்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் நீக்கியது குறித்து அறக்கட்டளை கூட்டம் கூட்டப்பட்டதா என்றால் கூட்டம் கூட்டப்பட்டது குறித்து தெரியாது. காசி, மலர்வேணி, பாலமுருகன் ஆகிய மூவரை அறக்கட்டளையில் இருந்து நீக்கம் செய்திட அறக்கட்டளை திருத்தல் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றும் 4வது நபராக 5ஆம் வாதி சேர்க்கப்பட்டது குறித்து மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த புகார் மனு தள்ளுபடி ஏன் செய்யப்பட்டது என்ற காரணம் தெரியாது என்றும் சாட்சியமளித்து வாதிகள் தரப்பு வழக்கு சங்கதிக்கு ஆதரவற்று சாட்சியம் அளித்தும் சாம்பவிகா கல்வி அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்ட பத்திரத்தின் by law விபரம் தெரிந்திடாமலும் சாம்பவிகா பள்ளிக்கான அறக்கட்டளை குறிப்பிடும் வங்கி கணக்கு விபரம் தெரிந்திடாமலும் வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். வா.சா.1 தனது சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் 1ம் வாதி அறக்கட்டளை மற்றும் 2ம் வாதி பள்ளியின் கணக்குகளை பார்த்து " சாட்சியம் அளிப்பதாக சொல்வதில் எந்த கணக்குகளை வா.சா.1 பார்த்தார் என்று குறிப்பிட்டு சாட்சியளித்திடாமலும் தாவா பரிகாரம் குறித்து முடிவு செய்திடுவதற்குறிய ஆவணங்கள் தாக்கல் செய்திடாமலும் வா.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

**16**) வாதியாக வா.சா.1 மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு தாவா வழக்கில் 4ம் பிரதிவாதியாக இருந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர்வழக்குரையில் தாவா வழக்கின் பிராது சங்கதி குறித்து எந்த விபரமும் குறிப்பிடவில்லை. தாவா பிராதினை முதலில் தாக்கல் செய்த 1 முதல் 4 வாதிகள் யாரும் மேற்படி பிராது சங்கதி குறித்து உறுதியூட்டிடும் வகையில் சாட்சியம் அளித்திட முன்வரவில்லை. வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.2ம் வழக்கு சங்கதிக்கு ஆதரவாக சாட்சியமளித்து ஆவணங்கள் தாக்கல் செய்திடவில்லை. வா.சா.3 அளித்துள்ள சாட்சியத்தின் மூலமாக சாம்பவிகா மேல்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி உரிய அங்கீகாரம் பெற்று நடைபெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**17**) 1-ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியமளித்து பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ23 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். மேற்படி ஆவணங்களானது தாவா வழக்கு பிராது சங்கதியை மறுதலிக்கக்கூடிய

ஆவணங்களாக இல்லை என்பதோடு தாவா பிராது பரிகாரத்திற்கு முரண்பட்டு உள்ளதை காணப்படுகிறது. ஏனெனில் தாவா வழக்கு பரிகாரமானது 20.05.2012-ம் தேதி வரையிலான சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வரவு செலவு விபரமும் சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியின் வரவு செலவு விபரமும் குறித்து 1ம் பிரதிவாதியிடம் உண்மையான கணக்கு விபரம் கேட்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிக்கு ஆட்சேபணையை அளிக்கத்தக்க தொடர்புடைய ஆவணங்களாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ-23 வரையிலான ஆவணங்கள் அமைந்திடவில்லை.

**18**) வாதிகளின் வழக்கு சங்கதியை உரிய ஆதரவுகளை முன்னிட்டு பிரதிவாதிகள் மறுதலித்திடவில்லை என்பதற்காக வாதிகள் பிராது சங்கதியை நிரூபித்து விட்டதாக எடுத்துக்கொள்ள இயலாது. பிராது சங்கதியை உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திடும் கடமை வாதிகளுக்கு உள்ளது. அந்த வகையில் பிராது சங்கதியை வாதிகள் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்களா என பார்க்கையில் தாவா பிராது பரிகாரமானது 20.05.2012 வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சாம்பவிகா மேல்நிலை பள்ளியின் உண்மையான மற்றும் சரியான வரவு செலவு கணக்குகளை வாதிகள் வசம் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளதில் மேற்படி காலம் வரையிலான மேற்படி அறக்கட்டளை பள்ளியின் வரவு செலவுகள் எந்த வகையில் பயன்படுத்தப்பட்டது என்றோ 1-ம் பிரதிவாதி மேற்படி கால கட்டத்தில் அறக்கட்டளை பள்ளியின் வரவு செலவுகளை உண்மையற்றும் சரியில்லாத வகையிலும் காட்டியுள்ளார் என்றும் எடுத்துக்காட்டிட சாட்சிய சான்றுகளை முன்னிட்டோ வாதிகள் வழக்கு சங்கதியை நிரூபித்திட வில்லை. வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்களும் வாதிகளின் வழக்கு சங்கதிக்கு ஆதரவாக இல்லை.

**19**) மேற்கண்ட காரணங்கள் மற்றும் சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக 1ம் பிரதிவாதி வாதி கல்வி அறக்கட்டளையின் தலைவர் மற்றும் செயலாளராக செயல்பட்டபோது அறக்கட்டளையின் கணக்குகளை முறையாக ஒப்படைக்காமல் இருந்து வந்தார் என்பதை வாதிகள் நிரூபித்திடவில்லை என்பதால் மேற்படி சங்கதி

சரியல்ல என்று எழுவினா 2-ற்கும் 1ம் பிரதிவாதி அறக்கட்டளையின் விதி முறைகளுக்கு எதிராக செயல்பட்டு முறைகேடு செய்துள்ளார் என்பது சரியல்ல என எழுவினா 3-ற்கும் 1ம் பிரதிவாதி 20.05.2012 ம் தேதி வரையிலான 1ம் வாதி அறக்கட்டளை மற்றும் 2ம் வாதி பள்ளியின் வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என்ற பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 5-க்கும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**20) <u>எழுவினா 1 மற்றும் 6-க்கான தீர்வு</u>-**

சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு 5-ம் வாதி ஆவண எண்.14/2016-ன் படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக சொல்வதில் மேற்படி ஆவணப் பதிவின்போது துணை விதிகள் மற்றும் முன் ஆவணங்கள் சரிபார்க்க தவறியுள்ளது என்றும் ஆவண எண்.14/2016-ஐ கொண்டு எவ்வித ஆவணப்பதிவும் மேற்கொள்ளக்கூடாது என்று சிவகங்கை மாவட்ட பதிவாளர் பிறப்பித்துள்ள ஆணையின் பேரில் எவ்வித மேல்முறையீட்டு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆதரவு தாக்கல் செய்யப்படாத சூழலில் மேற்படி 5ம் வாதி தாவா சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராக தகுதி கொண்டவரல்ல என்பதும் மேற்படி 5-ம் வாதியை மேற்படி அறக்கட்டளையின் உறுப்பினராக காட்டி மேற்கொண்ட திருத்தல் பத்திரமும், முடிவுகளும் ஏற்புடைய ஒன்றல்ல என்ற பிரதிவாதிகள் கட்சி ஏற்கும்படி உள்ளதால் சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு 1 முதல் 3 பிரதிவாதிகளும், 3, 4 வாதிகளும் மற்றும் பாரதி தாசன் ஆகிய 6 நபர்கள் மட்டுமே மேற்படி அறக்கட்டளை பத்திரமான 18.11.1999-ன் படி உறுப்பினர்கள் ஆவார்கள் என்ற சங்கதியும் மேற்படி உறுப்பினர்கள் சாம்பவிகா கல்வி அறக்கட்டளை கூட்ட அறிவிப்பு அனுப்பிட தடை எதுவும் இல்லை என்ற சங்கதியும் ஏற்கும்படி உள்ளதால் வாதிகள் கோரிடும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 6-க்கும், சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றுவிட்டது என்பது சரியல்ல என எழுவினா 1-ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**21) <u>எழுவினா 4-ற்கான தீர்வு -</u>**

தாவா பரிகாரமானது காலவரை தோஷத்தால் பாதிப்புக்கு உள்ளாகிறது என்ற சங்கதிக்கு ஆதரவாக எந்தவொரு சாட்சிய சான்றாவணங்களையும் முன்னிடாத காரணத்தால் தாவா வழக்கு காலவரை தோஷத்தால்

பாதிக்கப்பட்டுள்ளதாக சொல்வது சரியல்ல என எழுவினா 4-ற்கு இந்நீதிமனறம் தீர்வு காண்கிறது.

22 )<u>எழுவினா 7-ற்கான தீர்வு -</u>

இதர பரிகாரங்கள் மற்றும் செலவுத் தொகை இல்லை.

**முடிவாக**,

வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப் பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.04.21 17:13:38 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்-</u>**

வா.சா.1 – கார்திகேயன் (5 ஆம் வாதி)

வா.சா.2 – கார்த்திக்கேயன் த/பெ.பெருமாள்

வா.சா.3 – கலைமணி

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1- | 18.11.1999- | சாம்பவிகா கல்வி அறக்கட்டளை ஆவணம்- சான்று நகல் |
| வா.சா.ஆ.2- | 07.03.2012- | வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3- | -- | வழக்குரை - சார்பு நகல் |
| வா.சா.ஆ.4- | -- | எதிர் வழக்குரை - சார்பு நகல் |
| வா.சா.ஆ.5- | 2013-2014 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.6- | 2014-2015 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7- | 2015-2016 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.8- | 2016-2017 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.9- | 2017-2018 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.10- | 2018-2019 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.11- | 2019-2020 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.12- | 2020-2021 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.13- | 2021-2022 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.14- | 2022-2023 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.15 | 2023-2024 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.16- | 2024-2025 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |
| வா.சா.ஆ.17- | 2025-2026 | சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் வருமான வரி கணக்கு பட்டியல் - சான்று நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி-**

பி.வா.சா.1 - காசி

**பிரதிவாதிகள்தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1- | 25.12.2015- | சிவகங்கை மாவட்ட குற்ற பிரிவு காவல் துறை 3, 4 வாதிகள் மற்றும் 4 பேர்கள் மீது பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை- சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.2- | 15.11.2018- | 3, 4 வாதிகள் மீது 1 ஆம் பிரதிவாதி சிவகங்கை குற்றவியல் நடுவர் மன்றம் எண் 1ல் தாக்கல் செய்த தனி நபர் மனு CC.NO 114/2019- சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3- | 30.09.2015 முதல் 06.10.2015 | பேங்க் ஆப் இந்தியா வங்கியில் சாம்பவிகா கல்வி குழுவின் Account Statement -சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4- | --- | A.M.சேகர் காசிக்கு எழுதிய கடிதம்-அசல் |
| பி.வா.சா.ஆ.5- | --- | A.M.சேகர் காசிக்கு எழுதிய கடிதம்-அசல் |
| பி.வா.சா.ஆ.6- | --- | ராணி தனது சகோதரர் மாறனுக்கு எழுதிய கடிதம் - அசல் |
| பி.வா.சா.ஆ.7- | 19.06.2013- | 4ம் வாதி ராணி சூரக்குளம் கிராமத்தில் 4856 சதுர அடி மனையிடம் வாங்கியதற்கான வில்லங்க சான்று- இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.8- | 04.01.2013- | 3 ஆம் வாதி கார்டியனாக இருந்து தனது மகன் கார்த்திகேயன் பெயரில் வாணியங்காடு கிராமத்தி பி.வா.சா.ஆ.22ல் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்று - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.9- | 25.09.2013- | 4 ஆம் வாதி ராணி பையூர் கிராமத்தில் 2568 சதுர அடி மனையிடம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ்- இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.10- | 24.01.2014- | 3 ஆம் வாதி சேகர் சூரக்குளம் கிராமத்தில் 3200 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.11- | 11.09.2014- | 3 ஆம் வாதி சேகர் அல்லூார் கிராமத்தில் 1567.5 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.12- | 21.11.2014- | 3 ஆம் வாதி சேகர் சூரக்குளம் கிராமத்தில் 2572 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.13- | 20.01.2015- | 3 ஆம் வாதி சேகர் சூரக்குளம் கிராமத்தில் 3200 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.14- | 10.06.2015- | 3 ஆம் வாதி சேகர் அல்லூர் கிராமத்தில் 1305 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.15- | 23.03.2016- | 3 ஆம் வாதி சேகர் மங்கலம் கிராமத்தில் 1980 சதுர அடி மனையிடம் கிரையம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் -இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.16- | 09.11.2016- | 3 ஆம் வாதி சேகர் படமாத்தூரில் கிராமத்தில் 1 ஏக்கர் 81 செண்ட் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.17- | 28.07.2017- | 3 ஆம் வாதி சேகர் கௌரிப்பட்டி கிராமத்தில் 1 ஏக்கர் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.18- | 20.11.2017- | 3 ஆம் வாதி சேகர் காளையார்மங்கலம் கிராமத்தில் 5 ஏக்கர் 45 செண்ட் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.19- | 20.11.2017- | 3 ஆம் வாதி சேகர் காளையார்மங்கலம் கிராமத்தில் 1 ஏக்கர் 37 செண்ட் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.20- | 29.12.2017- | 3 ஆம் வாதி சேகர் மகன் பார்த்திபன் பெயரில் காளையார்மங்கலம் கிராமத்தில் 5 ஏக்கர் 51 செண்ட் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.21- | 29.12.2017- | 3 ஆம் வாதி சேகர் காளையார்மங்கலம் கிராமத்தில் 4 ஏக்கர் 74 செண்ட் விவசாய நிலம் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.22- | 20.06.2018- | 3 ஆம் வாதி சேகர் காளையார்மங்கலம் பிளாட் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.23- | 15.09.2020- | 4 ஆம் வாதி மதுரை கிழக்கு தாலுகா நரசிங்கம் 4 பிட் மனையிடங்கள் வாங்கியதற்கான வில்லங்க சான்றிதழ் - இணையதள நகல் |

<u>**சாட்சிய சான்றாவணங்கள்:**</u>

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | 10.11.2025- | காரைக்குடி வருமான வரித்துறை அலுவலகத்திலிருந்து வா.சா.2-க்கு கொடுக்கப்பட்ட கடிதம் |
| சா.சா.ஆ.2 | 10.11.2025 | காரைக்குடி வருமான வரித்துறை அலுவலகத்திலிருந்து வா.சா.2-க்கு கொடுக்கப்பட்ட அதிகார கடிதம் |
| சா.சா.ஆ.3 | 18.11.2025 | 2002-2012 மாவட்ட கல்வி அலுவலர், சிவகங்கை அவர்கள் வா.சா.3 அளித்த அனுமதி கடிதம் |
| சா.சா.ஆ.4 | 04.03.2003- | சிவகங்கை மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் வழங்கிய உத்தரவு- சான்று நகல் |
| சா.சா.ஆ.5 | 08.10.2002- | சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வழங்கிய உத்தரவு - சான்று நகல் |
| சா.சா.ஆ.6 | 29.06.2001- | சென்னையில் உள்ள இணை இயக்குனர் மேல்நிலை கல்வி வழங்கிய அங்கீகாரம் உத்தரவு - சான்று நகல் |

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.04.21 17:13:25 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court,
Sivagangai
O.S.No.559/2019
**Draft/Fair Judgment**
21.04.2026.